

விருதுநகர் மாவட்டம் , சிவகாசி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் , தூய்மை பாரத இயக்கம் திட்டத்தின் கீழ் சிவகாசி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் தூய்மைப் பணிகளை மேம்படுத்தும் வகையில் ரூ .2.02 கோடி மதிப்பில் 80 மின்கலன் வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் , தலைமையில் , சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் ஜி.அசோகன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் மற்றும் சிவகாசி சார் ஆட்சியர் திருமதி ந.ப்ரியா ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில், நிதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தூய்மைப் பணியாளர்களின் பயன்பாட்டிற்கு வழங்கி துவக்கி வைத்தார்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் , சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஊராட்சி ஒன்றியம், சாலைகிராமம் ஊராட்சியில் 03.03.2025 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித். தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆதமிழரசி ரவிக்குமார் முன்னிலையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டி, பணியினை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா.வானதி உட்பட பலர் உள்ளனர்.



தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த 12 குழந்தைகளுக்கு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான பெ.கீதாஜீவன் தங்க மோதிரங்கள் அணிவித்து, தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து உணவும், பழங்களும் வழங்கினார். உடன் மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், மாநகரத் துணைச் செயலாளர்கள் கனகராஜ், கீதா முருகேசன், வட்டச் செயலாளர்கள் சுப்பையா, பாலன், பாலு, கதிரேசன், கந்தசாமி, செந்தில்குமார், கங்கா ராஜேஷ், மாமன்ற உறுப்பினர்கள் விஜயலட்சுமி, நாகேஸ்வரி, ஜான் சீனிவாசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதியழகன், மாநகர இளைஞரணி அமைப்பாளர் அருண் சுந்தர், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அபிராமிநாதன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கோகுல், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் டினோ, தகவல் தொழில்நுட்ப அணியின் தொகுதி ஒருங்கிணைப்பாளர் அண்ணாதுரை, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ரவி, மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் சத்யா, மாநகர வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ரூப ராஜா, பகுதி இளைஞரணி அமைப்பாளர் சூர்யா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

### சாலைக்கிராம மக்களின் 25 ஆண்டு கால கோரிக்கை நிறைவேற்றம்!

# ரூ.1.50 கோடியில் புதிய பேருந்து நிலையம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பணியை துவக்கி வைத்தார்! தமிழரசி எம்.எல்.ஏ முன்னிலை!

சிவகங்கை, மார்ச் 5 -

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா சாலைகிராமத்தில் 25 ஆண்டுகளாக புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்து வருகிறார்கள் . இதில் தமிழக முதல்வரின் உங்கள் தொகுதியில் முதல்வன் திட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர்கள் மிகத் தேவையான கோரிக்கைகளை முதல்வருக்கு அனுப்புமாறு முதல்வர் அறிவித்திருந்தார். அதன் பேரில் மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் சாலை கிராமத்தில் 25ஆண்டுபொதுமக்கள் புதிய பேருந்து நிலையம் வேண்டும் என்ற கோரிக்கையினை நிறைவேற்றி தருமாறு முதல்வருக்கு அனுப்பி வைத்தார். தமிழரசி எம்.எல்.ஏ.தொடர் முயற்சியினால் கூட்டுறவு அமைச்சர் கே.ஆர்பெ.ரிய கருப்பன் பரிந்துரையின் பேரில் ரூபாய் ஒரு கோடியே 36 லட்சத்தில் புதிதாக பஸ் நிலையம் கட்டுவதற்கான உத்தரவினை முதல்வர் அவர்கள் பிறப்பித்து அதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்தார். அதன் பேரில் சாலைக்கிராமத்தில் புதிதாக பேருந்து நிலையம் கட்டுவதற்கான பணிதுவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித் தலைமையில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது. கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் புதிய பேருந்து கட்டிடப் பணியை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட அலுவலர் திருமதி வானதி வரவேற்றுப் பேசினார் .

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது. உங்கள் தொகுதியின் முதல்வன் திட்டத்தின் கீழ் இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் முயற்சியினால் சாலைக் கிராம பகுதி மக்களின் 25 ஆண்டு கால கோரிக்கை நிறைவேறி யுள்ளது. ரூபாய் ஒரு கோடி யே 36 லட்சத்தில் புதிதாக பஸ் நிலையம் அமைய உள்ளது. இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறை வேற்றிதந்த முதல்வருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான முயற்சிகளை எடுத்த சட்டமன்ற உறுப்பினருக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு புதிய பேருந்து நிலையம் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கழிப்பறை வசதிகள் மற்றும் மின் விளக்கு வசதிகளுடன் கட்டப்படும். ஆறு மாதத்தில் பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த நான்காண்டுகளாக திராவிட மாடல் நாயகர் முதல்வர் தளபதி அவர்கள் பதவியேற்ற நாள் முதல் பல்வேறு வளர்ச்சி பணிகள் நடைபெற்று உள்ளது .நமது மாவட்டத்தில் அதிக அளவில் பணிகள் நடைபெற்றுள்ளது . அரசிற்கு பொதுமக்களாகிய நாம் செலுத்தும் வரிப்பணம் அரசுக்கு வருவாயாக செல்கிறது. அந்த வருவாயினை வைத்து திட்டங்களை தீட்டி பல்வேறு பணிகளை அரசு நிறைவேற்றி வருகின்றது. சாலை கிராமத்தில் நான்கு ஆண்டுகளில்பா ரூபாய்12 லட்சம் வரி கட்டப்பட்டுள்ளது . அரசின் சார்பில் நான்காண்டுகளில் 168 பணிகள் ரூபாய் 10 கோடியே 40 லட்சம் செலவில் நடைபெற்றுள்ளது. நல்ல முறையில் திட்டங்கள் தீட்டி முதல்வர் அவர்கள் அறிவித்து வருகிறார் .அதை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் .நமது மாவட்டமும் ,மாநிலமும் நான்கு ஆண்டுகளில் பல்வேறு சிறப்பான முன்னேற்றங்களை அடைந்துள்ளது. இந்தியாவிலேயே தமிழகம் அனைத்து துறைகளிலும் முன்னேறி வருகிறது . இதற்காக பல்வேறு மாநிலங்களின் பாராட்டினை பெற்றுள்ளது. அரசியலிற்கு அப்பாற்பட்டு . நடுநிலையாளர்கள் பத்திரிகையாளர்கள் பாராட்டுகிறார்கள் . தமிழக முதல்வர் தளபதி அவர்கள் அரசினை பாராட்டு பெறும் வகையில் நன்றாக நடத்தி வருகிறார். கட்சியினையும் நன்றாக நடத்தி வருகிறார் . மாநில உரிமைகளை மீட்க போராடி வருகிறார் .தலைவர் கலைஞர் அவர்கள் இந்திய அரசியலில் என்ன கூறுகிறார் என்பதை இந்திய அளவில் அரசியல் தலைவர்கள் எதிர்பார்த்தார்கள் .அதே வழியில் இன்று நமது முதல்வர் அவர்களும் என்ன கூறுகிறார் என்பதை எதிர்பார்க்கிறார்கள் . பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படும் வழியில் நமது முதல்வர்அவர்கள் செயல்பட்டு வருகிறார் .கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார் .கொடுக்காத வாக்குகளையும் நிறைவேற்றி வருகிறார் .பல்வேறு நிதிநெருக்கடி சூழ்நிலையில் எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல்ஆட்சியை நடத்தி வருகிறார். .ஒன்றிய அரசுக்கு என்று தனியாக வருவாய் ஏதும் கிடையாது. ஒருசில துறைகளின் மூலமாக வருவாய் வருகிறது. மாநில அரசுகள் தரும் அதிக வருவாயில் தான் ஒன்றிய அரசு நடைபெறுகிறது. நாம் வருவாயை அதிகம் அள்ளிக் கொடுத்தாலும் அது நமக்கு திருப்பி தரும்போது கிள்ளித்தான் தருகிறது. ஒரு ரூபாய்க்கு 29 பைசா தான் மாநிலத்திற்கு தருகின்றது. ஆனால் மற்றமாநிலங்களுக்கு கூடுதலாக நிதி ஒதுக்குகிறது. தமிழகத்தை ஒன்றிய அரசு வஞ்சித்து வருகிறது. பாரபட்சமாக நடத்துகிறது . தமிழகத்தின் வளர்ச்சி பிடிக்காமல் தமிழக மக்களை பல்வேறு வகையில் வஞ்சித்து வருகிறது .தற்போது மும்மொழிக் கொள்கையின் மூலம் குழப்பத்தை ஏற்படுத்தி வருகிறது. ஏற்கனவே 1965 ல் மொழி போராட்டம் தமிழகத்தில் ஏற்பட்டது. அத்தகைய மிகப்பெரிய போராட்டத்தினால் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அப்போது பிரதமராக இருந்த நேரு அவர்கள் இரு மொழிக் கொள்கையினை உறுதி மொழியாக அறிவித்து அது செயல்படும் என்று அறிவித்தார் . அது தற்போது ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையின் மூலம் மாறுகிறது .இந்தி மொழியை படிக்க வேறு வகையில் ஒன்றிய அரசு நிர்ப்பந்தம் செய்கிறது .மீண்டும் ஒரு மொழி போராட்டம் நடைபெறும் அபாய சூழ்நிலை தமிழகத்தில் உள்ளது. நிதி நெருக்கடி, மொழி திணிப்பு மற்றும் பல்வேறு வகையில் நமது ஆட்சிக்கு பல்வேறு வகையில் இடையூறுகளை ஒன்றிய அரசு செய்து வருகிறது. ஆனால் இதையெல்லாம் சாதுர்யமாக முதல்வர்அவர்கள் சமாளித்து ஆட்சியை நடத்தி வருகிறார் .இருமொழிக் கொள்கையினால் தமிழகத்தில் அதிகம் படித்தவர்கள் உலக நாடுகள் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு உயர் பொறுப்புகளில் பதவிகளை வகித்து வருகிறார்கள். இருமொழி கொள்கையினால் ஆரோக்கியமான கல்வி வளர்ச்சியை தமிழகம் பெற்றுள்ளது. சமீபத்தில் கூட ஒன்றிய அரசு பேரிடர் நிவாரண நிதியினை வழங்கவில்லை . ஆனால் இதையெல்லாம் சமாளித்து தமிழக மக்களை காப்பாற்றும் கலங்கரை விளக்கமாக நமது முதல்வர்அவர்கள் விளங்கி வருகிறார்கள். தொடர்ந்து தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வரும் முதல்வரின் கரத்தினை வலுப்படுத்திட வேண்டும்.என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அமைச் சர் கே.ஆர் .பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய ஆணையர் விஜய குமார் நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சியில் சாலை கிராம பங்கு தந்தை சகாய சேவியர், முகமதுயாசீன், முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி ,திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர்த. சேங்கை மாறன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆறு. செல்வராஜன், வே.தமிழ்மாறன், கா .வெங்கட்ராமன் , மாவட்ட இளைஞரணி துணைஅமைப்பாளர் மகாவீர் ,ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் தனசேகரன், ஒன்றிய கழக நிர்வாகிகள் மலைமேகு, விவசாய அணி காளிமுத்து ,நயினாமுகமது, கணேசன், சூசை ,நாகசுந்தரம், ரவிச்சந்திரன் ,சேவியர், தயாளன், மகளிர் அணி மலையரசி ,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் செல்வி சாத்தையா, சித்திரவேலு ,தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சுப. அன்பரசன், மொழிப் போர் தியாகி பாலு, நாசர் ,கான் முகமது, அய்யாசாமி,மீனவரணி அண்ணாமலை, விவசாய்அணி சேகர் வட்டாட்சியர் முருகன், உட்பட ஏராளமான பொதுமக்கள்கலந்துகொண்டார்கள்.



சிவகங்கை நகர் 23,24 வார்டு கழகத்தின் சார்பில்அவைத்தலைவர் மதார்,அப்துல்லா ஏற்பாட்டின் பேரில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழகக் கொடி ஏற்றி உறுதி மொழியை சிவகங்கை நகர் கழக செயலாளரும் நகர் மன்ற தலைவர்சி.எம்.. துரை.ஆனந்த் கூற மற்றவர்கள் உறுதிமொழி ஏற்றார்கள்.இதில் வழக்கறிஞர் ஆதி.அழகர்சாமி, கவுன்சிலர் கள் அயூப் கான், ஜெயகாந்தன் ,மகளிரணி திலகவதி கண்ணன் , ராஜேஸ்வரி , முருகேசன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .

### நெல்லை மத்திய மாவட்டத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளன்று

# அரசு மருத்துவமனையில் பிறந்த 12 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அணிவித்தார்!

நெல்லை, மார்ச் 5 -

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த 12 குழந்தைகளுக்கு தங்க மோதிரம், மாவட்ட விவசாய அணி தலைவர் நாங்குநேரி நடராஜன் ஏற்பாட்டிலும், நெல்லை டயோசிஸ் பார்வையற்றோர் பெண்கள் முதியோர் இல்லத்தில் அறுசுவை உணவு மாவட்டப் பிரதிநிதி வல்லநாடு முத்து,மாமன்ற உறுப்பினர் பாலம்மாள் முத்து ஏற்பாட்டிலும், தச்சை சிவன் கோவில் வளாகத்தில் அறுசுவை உணவு மாமன்ற உறுப்பினர் டாக்டர் சங்கர் ஏற்பாட்டிலும் நடைபெற்ற நிகழ்வுகளில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப் பங்கேற்று சிறப்பித்தார்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் பிறந்தநாள் விழாவை ஏழை,எளிய மக்கள் பயன்பெறும் வகையில் கொண்டாட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

அதன்படி நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 2ம் தேதி பிறந்த 12 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் நிகழ்வு மாவட்ட விவசாய அணி தலைவர் நடராஜன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. பங்கேற்று தங்க மோதிரத்தை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து சி.எஸ்.ஐ. நெல்லை டயோசிஸ்பெண்கள் முதியோர் இல்லத்தில் அறுசுவை உணவும்,தச்சை சிவன் கோவில் வளாகத்தில் அறுசுவை உணவும் வழங்கினார்.

நிகழ்வில் நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் துணை மேயர் ராஜு,கழக வழக்கறிஞர் தினேஷ்,திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் ரேவதி பாலன்,நரம்பியல் நிபுணர் டாக்டர்.ரவி,மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநகர துணை செயலாளர் பிரபு பாண்டியன்,பகுதி செயலாளர்கள் அண்டன் செல்லத்துரை, துபை சாகுல், ஒன்றிய கழக செயலாளர்கள் அன்பழகன்,மாரியப்பன், மண்டல தலைவர்கள் பிரான்சிஸ் (பாளை) மகேஸ்வரி (நெல்லை)ரேவதி பிரபு, (தச்சை) கதீஜா இக்லாம் பாசிலா (மேலப்பாளையம்)மாநகர துணை செயலாளர்சுதாமூர்த்தி,மானூர் ஒன்றிய குழு தலைவர் செல்வி ஸ்ரீலேகா அன்பழகன்,வட்டக் கழக செயலாளர்கள் ஆவின் கல்யாண சுந்தரம்,ஜெயின் உசேன், கிருஷ்ணன், பால மகேஷ், மாமன்ற உறுப்பினர்கள் கந்தன்,டாக்டர். சங்கர், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், வழக்கறிஞர் சுந்தர்,நித்திய பாலையா, ரம்ஜான் அலி, பேச்சியம்மாள்,கோகுல வாணி சுரேஷ்,சின்னதாய் கிருஷ்ணன், ஒன்றிய பொருளாளர் மகாராஜன் மாவட்ட பிரதிநிதி அருணாச்சல பாண்டியன்,ஒன்றிய கவுன்சிலர்கள் சுரேஷ்,முபின் இஸ்மாயில்,மாவட்ட பிரதிநிதி வல்லநாடு முத்து,மாநகர பிரதிநிதிகள் சுண்ணாம்பு மணி, சாமுவேல்,வட்ட பிரதிநிதிகள் கிருஷ்ணன், பாளை மகேஷ்,குணா, கருங்குளம் காந்தி,விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் பலராமன், டாஸ்மாக் தொழிற்சங்க மாவட்ட தலைவர் அரசன் ராஜ், மீனவர் அணி முன்னாள் மாவட்ட அமைப்பாளர் பீனிக்ஸ் அந்தோணிதயா சங்கர், ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் மேலவாசி பாண்டியன், தச்சை பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் மகேஷ் ஆதித்தன் மானூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சாமுவேல், மாநகர மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பத்மா,மாவட்ட துணை அமைப்பாளர் தேவிகா, மாநகர துணை அமைப்பாளர் ஆணி ரேக்லண்ட்,அருணாச்சலம், ஏஞ்சலின், இசக்கிப் பாண்டியன், இளைஞரணி கணேஷ், செண்டு, மலையாளமேடு கண்ணன், லாலா குமார், பத்மநாபன்,சேதுராமலிங்கம், தகவல் தொழில் நுட்ப அணி காசி மணி,பொறியாளர் அணி சாய்பாபா உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நிறைவில் உரிமைக்காக போராடும் தமிழகம் என்றும் வெல்லும் என்று உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.



எல்லோருக்கும் எல்லாம் என்பதை மெய்படுத்தி வழிநடத்தும் திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு இராமநாதபுரம் வடக்கு நகர் கழகத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இராமநாதபுரம் நகராட்சி பணியாளர்களுக்கு இலவச மருத்துவ முகாம், இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட நான்கு அரசு பள்ளி மாணவ, மாணவியருக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா மற்றும் சிறை கைதிகளுக்கு உணவு வழங்கும் விழாவில் கலந்து கொண்ட இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார் இந்நிகழ்ச்சியினை இராமநாதபுரம் வடக்கு நகர் செயலாளர் நகர் மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம் ஏற்பாடு செய்திருந்தார் நிகழ்ச்சியில் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன்,ஒன்றிய கழகச் செயலாளர் கே.ஜெ.பிரவீன், நகர் மன்ற உறுப்பினர் காளிதாஸ் மற்றும் உடன் கழக நிர்வாகிகள் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



தமிழக முதல்வர் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு திருமங்கலம் பேருந்து நிலையத்தில் தொ.மு.ச. மாநில துணைத்தலைவர் மதுரை மண்டல பொதுச் செயலாளர் மேலூர் வி.அல்போன்ஸ் தலைமையில் பொதுமக்கள், பயணிகள் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது . அகில இந்திய வல்லரசு பார்வர்ட் பிளாக் பொதுச் செயலாளர் பா.சந்திரசேகரன் மற்றும் பல நிர்வாகிகள் தொ.மு.ச. நிர்வாகிகள் உடன் இருந்தனர்.